www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com

# ஆயுத்த பொதுத் தேர்வு - 2022

12 ஆம் வகுப்பு **உயிரியல்** பதிவு எண்:

## பகுதி - I உயிரி தாவரவியல்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 35

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (08x1=08)

1. புவியின் மொத்த கார்பனின் சுமார் 70% காணப்படுவது
   அ)காடுகள் ஆ)புல்வெளிகள் இ)வேளாண் சூழல் மண்டலம் ஈ)கடல்கள்
2. வளி மண்டலத்தில் ஓசோன் எந்த அடுக்கில் காணப்படுகிறது
   அ)அயனி மண்டலம் ஆ)இடைவெளி மண்டலம் இ)அடுக்கு வளி மண்டலம் ஈ)வெப்ப மண்டலம்
3. சிப்கோ இயக்கம் இதை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது
   அ)காடுகள் ஆ) கால்நடைகள் இ)ஈரநிலங்கள் ஈ)புல்வெளிகள்
4. தழை உர இடலின் முக்கிய குறிக்கோள்?
   அ)பாஸ்பரஸை உயர்த்துதல் ஆ)கார்போஹைட்ரேட்டை உயர்த்துதல்
   இ)பொட்டாசியத்தை உயர்த்துதல் ஈ)நைட்ரஜனை உயர்த்துதல்
5. புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட தாவரம் புதிய சூழ்நிலைக்கு தன்னை தகவமைத்துக் கொள்வது
   அ)முதல் நிலை அறிமுகம் ஆ)தேர்ந்தெடுத்தல் இ)தொற்று தடைக்காப்பு ஈ)இணக்கமாதல்
6. கீழ்க்கண்ட எந்த கோதுமை ரகம் மெக்சிகோ நாட்டில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டது
   அ)சோனாரா 63, 64 ஆ)பூசா கோமல் இ)ஹிம்கிரி ஈ)IR8
7. அல்ஷிமர் நோய் சிகிச்சையில் பயன்படுத்தப்படுவது
   அ)மார்ஃபின் ஆ)கேப்சைனின் இ)வாஸ்சின் ஈ)குர்குமின்
8. எதிலிருந்து பிரித்து எடுக்கப்படும் சாறு ஹெபடைடிஸ் ட வைரஸ் தாக்குதலுக்கு எதிராக செயல்படுகிறது
   அ) பில்லாந்தஸ் அமாரஸ் ஆ) ஜஸ்டிசியா ஆடாதோடா
   இ)ஆண்ட்ரோகிராபிஸ் பானிகுலேட்டா ஈ)குர்குமா லாங்கா

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** (4x2=08)

9. பசுமை இல்ல விளைவு என்றால் என்ன?
10. கார்பன் கவரபடுதல் மற்றும் சேகரித்தல் என்றால் என்ன?
11. இந்தியாவின் கருந்தங்கம் என்று அழைக்கப்படும் நறுமண பொருள் எது? அதன் பயன்கள் இரண்டினை பற்றி எழுதுக
12. இயற்கை வேளாண்மை- சிறு குறிப்பு வரைக.
13. தழை உரமாக பயன்படுத்தப்படும் பயிர்கள் இரண்டினை பற்றி எழுதுக.
14. புலன் உணர்வு மாற்று மருந்துகள் என்றால் என்ன?
15. ஓசோன் துளை என்றால் என்ன?

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.** (3x3=09)

16. பசுமை இல்ல விளைவு உண்டாக்கும் மனித செயல்பாடுகள் பற்றி எழுதுக.
17. கலப்பின வீரியம் குறிப்பு வரைக.
18. முதல் நிலை அறிமுகப்படுத்துதல் இரண்டாம் நிலை அறிமுகப்படுத்துதல் வேறுபடுத்துக.
19. மஞ்சளின் மருத்துவ பயன்கள் பற்றி எழுதுக.
20. கசப்புக்களின் அரசன் என அழைக்கப்படுவது எது? அதன் மருத்துவ முக்கியத்துவத்தை குறிப்பிடு.

**IV. இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** (2x5=10)

21. உன் வீட்டு தோட்டத்திற்கு இயற்கை பூச்சிக்கொல்லியை வீட்டில் உள்ள காய்கறிகளை பயன்படுத்தி எவ்வாறு தயாரிப்பது **(அல்லது)**
    ஓசோன் குறைதலின் விளைவுகள் யாவை?
22. புலன் உணர்வு மாற்ற மருந்துகள் என்றால் என்ன? அபின் மற்றும் கஞ்சா செடி பற்றி குறிப்பு வரைக.
    **(அல்லது)**
    காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் யாவை?


Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

## பகுதி - 2 உயிரி விலங்கியல் மதிப்பெண்கள் 35

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:-** 8x1 = 8

1. வேட்டையாடுதல் மற்றும் ஒட்டுண்ணி வாழ்க்கை முறை எந்த வகை உயிரினச் சார்பு?

அ. (+,+) ஆ (+,-) இ. (-,-) ஈ. . (+,0)

2. கீழ்கண்வற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| பத்தி - I | பத்தி - II |
|---|---|
| அ. பகிர்ந்து வாழும் வாழ்க்கை | 1. சிங்கம் மற்றும் மான் |
| ஆ. உதவிபெறும் வாழ்க்கை | 2. உருளைப்புழு மற்றும் மனிதன் |
| இ. ஒட்டுண்ணி வாழ்க்கை | 3. பறவைகளும் அணில்களும் உணவிற்குப் போட்டியிடுதல் |
| ஈ. கொன்றுண்ணி வாழ்க்கை | 4. பறவைகளும் பாலூட்டிகளும் விதை பரவுதலுக்கு உதவுதல் |

அ. அ - 2 ஆ - 3 இ - 1 ஈ - 5 உ - 4 ஆ. அ - 3 ஆ - 1 இ - 4 ஈ - 2 உ - 5

இ. அ - 4 ஆ - 5 இ - 2 ஈ - 3 உ - 1 ஈ. அ - 5 ஆ - 4 இ - 2 ஈ - 3 உ - 1

3. இயற்கையான வாழிடங்களினுள் உயிரிய பல்வகைத்தன்மை பாதுகாப்பு என்பது

*அ.* சூழல்வெளி பாதுகாப்பு ஆ. *சூழல்உள் பாதுகாப்பு* இ. உடலுள் பாதுகாப்பு ஈ. உடல்வெளி பாதுகாப்பு

4. உயிரியப் பல்வகைத்தன்மை என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?

அ. எட்வேர்டு வில்சன் ஆ. நார்மன் மியர்ஸ் இ. வால்டர் ரோசன் ஈ. ஆலிஸ் நார்மன்

5. பின்வரும் பகுதிகளில் எது பூமிக்கோளின் நுரையீரல் என அறியப்படுகிறது.

அ. அமேசான் காடுகள் ஆ. வடகிழக்கு இந்தியாவின் மழைக்காடுகள்

இ. ஊசிலைக் காடுகள் ஈ. இலையுதிர் காடுகள்

6. கைப்பேசிகளின் மூலம் உருவாகும் மின்னணுக் கழிவுகளில் எந்த உலோகம் அதிகமாகக் காணப்படுகிறது?

அ. தாமிரம் ஆ. வெள்ளி இ. பலேடியம் ஈ. தங்கம்

7. புலித்திட்டம் முதன் முதலில் எங்கு துவக்கப்பட்டது

அ. காசிரங்கோ தேசியபூங்கா ஆ. கார்பெட் தேசியபூங்கா

இ. முக்குருத்தி தேசிய பூங்கா ஈ. கீர் தேசிய பூங்கா

8. மண் சூழலியலில் மண் புழுக்களின் பங்கு மற்றும் கழிவு மேலாண்மை பற்றிய ஆராய்ச்சி மேற்கொண்டவர் யார்?

அ. சலிம் அலி ஆ. கோ. நம்மாழ்வார் இ. டாக்டர். இஸ்மாயில் ஈ. ரோமுலஸ் விட்டேக்கர்.

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 15 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளி** 4x2 =8

9. வேறுபடுத்துக – மிகைவெப்ப வேறுபாடு உயிரிகள் (ம) குறை வெப்ப வேறுபாட்டு உயிரிகள்

10. மண்ணின் நான்கு பெரிய பணிகள் யாவை?

11. "அமோசான் காடுகள் பூமிக்கோளின் நுரையீரலாக" கருதப்படுகறிது? இந்த சொற்றொடரை நியாயப்படுத்துக.

12. இணை மரபற்றுபோதல் என்றால் என்ன? எ.கா தருக.

13.குறிப்பு வரைக:- யுட்ரோபிகேஷன் **(அ)** மிகை உணவூட்டம்

14.மருத்துவக் கழிவுகளை பட்டியலிடுக?

15.சுழல் சுகாதாரக் கழிவறைகள் என்றால் என்ன?

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. 19 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 3x3 =9

16.பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீதம் என்றால் என்ன?

17.சுற்றுசூழல் மாசுபாட்டினை குறைப்பதில் தனி நபரின் பங்கினை விவாதி?

18.உயிரிய உருப்பெருக்கம் என்றால் என்ன?

19.மரபணு வங்கிகள் **(Gene Bank)** என்றால் என்ன?

20.உயிரிப் பல்வகைத்தன்மையின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு நாம் எவ்வாறு பங்களிக்க முடியும்?

**IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:-** 2x5 =10

21.இருவேறு சிற்றின விலங்குகளுக்கிடையேயான சார்புகளை அட்டவணைப்படுத்துக.

**அல்லது** திடக்கழிவுகளின் முக்கிய மூலாதாரங்கள் அட்டவணைப்படுத்து.

22. உயிரிய பல்வகைத்தன்மை இழப்பதற்கான பல்வேறு காரணங்களை பட்டியலிடுக. **அல்லது**
அயல் சிற்றினங்களின் படையெடுப்பு ஓரிட சிற்றினங்களுக்கு அச்சுறுத்தலாக விளங்குகின்றது. வாக்கியத்தை நிரூபி.



Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com